தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies | ISSN(o): 3049-0723
[Impact Factor: 9.47] Monthly, Peer-Reviewed, Refereed, Indexed Journal with IC Value : 86.87
Volume - 1, Issue - 09, June - 2025

DOIs: https://doi.org/10.63300/tm0110.25 --:-- Research Paper

# Tamilar Festivals in Tamil Culture

**K. Parameshwari,**
Full-time Ph.D. Research Scholar, Registration Number: CRE/TAM22PNOV285/2022
**Guide: S. Niranjana Devi**
Karuppannan Mariyappan College, Chettiar Palayam, Muthur.
Email: mithulparames@gmail.com

***Abstract:*** *Tamil culture is deeply ancient. Festivals and their associated traditions hold significant importance in Tamil culture. In an agricultural society, harvest day holds a special place and is also considered an auspicious day for expressing gratitude to nature. Accordingly, this article examines and elaborates on the Pongal festival, currently known as Uzhavar Thirunaal or Pongal Vizha, based on information found in Tamil literature, focusing on the festival itself and its ancient traditions. Furthermore, this research article also explores the unique position held in Tamil culture by heroism, which is a key component of Tamil identity, and the associated sport of 'Eru Thazhuvuthal' (bull-taming/Jallikattu).*

***Key Words:*** *Eru Thazhuvuthal, Sennel (Red Paddy), Pavai Nonbu, Thainiraadal, Pudhiyidu, Bogi, Kathir Eduthal (Harvesting).*

# தமிழர் பண்பாட்டில் தமிழர் திருநாள்

**க. பரமேஸ்வரி,**
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : CRE/TAM22PNOV285/2022,
**நெறியாளர்: எஸ்.நிரஞ்சனா தேவி**
கருப்பண்ண மாரியப்பன் கல்லூரி, செட்டியார் பாளையம், முத்தூர்.
மின்னஞ்சல்: mithulparames@gmail.com

***Abstract:*** *தமிழர் பண்பாடு மிகத்தொன்மையானது. தமிழர் பண்பாட்டில் திருவிழாக்களும் அது தொடர்பான மரபுகளும் மிக முக்கியமானவைகள். வேளாண் பண்பாட்டில் அறுவடை நாள் சிறப்பிடம் பெறுவதுடன் அது இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் நன்நாளாகவும் கருதப்படுகிறது. அந்த வகையில் உழவர் திருநாள், பொங்கல் விழா என்று தற்போது அழைக்கப்படுகின்ற விழா குறித்து தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் செய்திகளின் அடிப்படையில் பொங்கல் விழா குறித்தும் அதன் தொன்மையான மரபுகள் குறித்தும் ஆராய்ந்து கூறுகிறது இக்கட்டுரை. மேலும் தமிழ் பண்பாட்டின் ஒரு கூறாகத் திகழ்கின்ற வீரம்மும் அது சார்ந்த 'ஏறு தழுவுதல்' என்ற விளையாட்டும் தமிழ்ப் பண்பாட்டில் பெறும் தனி இடத்தினையும் இந்த ஆய்வுக் கட்டுரை ஆராய்ந்து கூறுகிறது.*

***குறிப்பு சொற்கள்*** *: ஏறுதழுவுதல், செந்நெல், பாவை நோன்பு, தைநீராடல்,புதுயீடு, போகி, கதிர் எடுத்தல்..*

## முன்னுரை:

பொங்கல்விழா, ஏறுதழுவுதல் விழா குறித்து தொன்மையான தமிழ் இலக்கியங்கள் வழி ஆராயப்படுகிறது. இந்த விழாக்கள் தமிழர்களின் அடையாளமாகத் திகழ்வதையும், பிற பண்பாட்டில் இதுபோன்ற விழாக்கள் குறித்தும் ஆராய்கிறது.

**பொங்கல் விழா**

பொங்கல் திருநாள் என்பது சமயச் சார்பற்ற, உழவை முதன்மைப்படுத்தும் பண்டிகை. உழவர்கள் பூமி, சூரியன், நீர்நிலைகள் போன்ற இயற்கை அமைவுகளுக்கும், தம் வாழ்வோடு இணைந்த கால்நடைகளுக்கும், நன்றி தெரிவிப்பதற்காகவும் மழைவளம் வேண்டுவதற்காகவும் நடத்தப் பெறும் விழாவாகவும் உள்ளது. தமிழர் மரபில் சங்ககாலம் தொட்டே அதாவது கி.மு. 2ஆம் நூற்றாண்டு முதலே பொங்கல் திருநாள் வெவ்வேறு வடிவங்களில் தமிழ் நிலத்தில் நிலை பெற்றுள்ளதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன.

‘அலங்கு செந்நெல் கதிர் வேய்ந்த பாய் கரும்பின் கொடிக்கீரை சாறு கொண்ட களம்போல' என்று குறுங்கோழியூர் கிழார் எனும் புலவர் அறுவடை விழாவை சாறு கண்ட களம் என வருணிக்கிறார். கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சீவக சிந்தாமணி பொங்கல் பற்றி ‘மதுக்குலாம் அலங்கல் மாலை மங்கையர் வளர்த்த செந்நீப் புதுக்கலத்து எழுந்த தீம்பால் பொங்கல்’ எனப் பொங்கலைக் குறிப்பிடுவதில் இருந்தே அதன் தொன்மையை அறியலாம்.

**பாவை நோன்பு**

சங்க காலத்தில் பெண்கள் மார்கழி மாதம் முப்பது நாட்களும், மழைவளம் வேண்டியும் பயிர் வளம் வேண்டியும், நல்ல கணவன் அமையப்பெற வேண்டும் என்பதற்காகவும் 'பாவை நோன்பு' என்ற விரதம் இருந்து முதல் நாள் விரதத்தைக் கலைத்து நீராடி அறுசுவை உணவு சமைத்து உண்பர். இதனை தை நீராடல் என்பர். தை நீராடல் குறித்து பரிபாடல் ‘தாயருகா நின்று தவத்தைநீராடல் நீயுரைத்தி வையை நதி’ என்கிறது. திருமணம் ஆகாத கன்னிப் பெண்கள் தாய்மார் அருகில் நின்று வைகையில் தை நீராடி சிறந்த கணவனைப் பெற வேண்டும் என்பதற்காகவும் பழந்தமிழர் இந்தத் திருநாளைக் கொண்டாடினர். ‘தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ’ என்கிறது கலித்தொகை. ஆண்டாளின் திருப்பாவையும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் இதனை விரிவாக விளக்குகிறது. பல்லவர் ஆட்சிக் காலத்தில் தை நீராடல் தமிழ்நிலத்தில் சிறப்பு வாய்ந்த பண்டிகையாகத் திகழ்ந்தது.

பாவை நோன்பு காலத்தில் பால் மற்றும் பால் பொருட்களை கன்னிப் பெண்கள் உண்ணமாட்டார்கள். தலைக்கு எண்ணெய் வைக்காமலும் கண்ணுக்கு மையெழுதாமலும் இருப்பர். மார்கழி மாதம் முழுவதுவும் வாசலில் கோலமிட்டு கோலத்தின் மையத்தில் சாணம் வைத்து அதில் பூசணிப் பூவைச் செருகுவர். ஒவ்வொரு நாள் மாலையிலும் பூவோடு சேர்த்து சாணத்தினை வறட்டியாக்குவர். தை மாதம் பிறந்த உடன் அதன்மேல் கற்பூரம் ஏற்றி ஆறு, ஏரி, குளம் இவற்றில் நீராடித் திரும்புவர்.

**புதுயீடு**

பொங்கல் திருநாள் குறித்த பழந்தமிழரின் அறிவியல் நோக்கையும் நாம் கருதிப் பார்க்க வேண்டும். சூரியன் தை மாதத்தில் இருந்து ஆனி மாதம் வரை ஆறுமாதம் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி நகர்கிறது. இதை உத்தராயண காலம் என்றும் ஆடிமாதம் முதல் மார்கழி வரை வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நகர்கிறது. இதை தட்சிணாயாணம் என்றும் கணித்து உத்தராயண காலத்தின் தொடக்கத்தினையே, அதாவது தை முதல் நாளையே சூரியனை வணங்கும் பொங்கல் பண்டிகை என்னும் அறுவடை நாளைக் கொண்டாடுகின்றனர். ஆண்டின் முதல் அறுவடை என்ற வகையில் இதனை 'புதுயீடு' என்றும் சோழர் கல்வெட்டுகள் கூறுகின்றன.

இந்தப் பொங்கல் நாளுக்கு முதல் நாள் போகிப் பண்டிகை. இந்திரனுக்கு போகி என்ற பெயரும் உண்டு. எனவே இந்திரனுக்கு உரிய இந்திர விழாவாகவும் இருந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. மழைவளம் வேண்டி இந்திரனை வழிபடும் வழக்கமும் இருந்துள்ளது. இந்திரனுக்கு உரிய ஆயுதம் கரும்பு வில் அதன் காரணமாகவே பொங்கல் பண்டிகையில் கரும்பு முதன்மையிடம் பெறுகிறது.

போதியை பலராமன் விழா என்றும் சொல்வார்கள். பலராமனைப் 'போகி' என்று அழைக்கும் வழக்கம் இருந்ததாகப் பாண்டியர்களின் செப்புப் பட்டயம் குறிப்பிடுகிறது. பலராமனின் ஆயுதம் கலப்பை, பலராமனை விவசாயத் தெய்வமாக வழிபடும் மரபும் சங்ககாலத்தில் இருந்துள்ளது.

**கதிர் எடுத்தல்**

பொங்கல் விழாவின் ஒரு அங்கமாக உழவர்கள் மார்கழி மாதத்தில் தைப் பொங்கலுக்கு முன்னர் கதிர் எடுத்தல் நிகழ்வை நிகழ்த்துவர். குடும்பத் தலைவன். காலையில் நீராடி, குலதெய்வத்தினை வணங்கி வயலின் வரப்பில் 'பிள்ளையார் பிடித்து வைத்து பூ, பழம், பாக்கு, வெற்றிலை படைத்து. தேங்காய் உடைத்து அறுவடைக்குத் தயாராக இருக்கும் நெற்கதிரை சிறிதளவு வெட்டி, வீட்டிற்குக் கொண்டு வருவார்கள். அதை மனையாள் வாங்கி வீட்டின் கூடத்திலோ, தெய்வத்தை வழிபடும் இடத்திலோ கட்டித் தொங்கவிடுவர். அது அடுத்த வருடம் கதிர் எடுக்கும் வரை அங்கு தொங்கிக் கொண்டிருக்கும்.

கதிர் எடுப்பதன் மூலம் அந்த வருடம் முழுவதுவும் தானியத்திற்கு குறைவு இருக்காது என்பது நம்பிக்கை மிகுதியாக உள்ள நெற்கதிர்களை அரிசியாக்கி அந்தப் புத்தரிசியைப் பயன்படுத்தி, புதுப்பானையில் பொங்கலிடுவது வழக்கம். அதுவரை களத்துமேட்டில் நெற்கதிர்கள்,நெல் பிரிக்கப்படாமல் குவியலாகக் கிடக்கும்.

பொங்கலின்போது, படைக்கப்படும் பொங்கல் பச்சரிசி, பால், வெல்லம் அல்லது இலுப்பை பூ. உளுந்து அல்லது பச்சைப் பயிறு, வாழைப்பழம் போன்றவற்றைக் கொண்ட இனிப்புப் பொங்கலாகும். சோழர்காலம் வரை அதாவது 13ஆம் நூற்றாண்டு வரை பொங்கல் இதே கூறுகளைக் கொண்டு, அக்கார அடிசில் எனப்பட்டது. அதன் பின்னர்தான் முந்திரி, திராட்சை,ஏலக்காய் சேர்க்கப்பட்டன.

பொங்கலிடும்போது அரிசியைப் பானையில் இடுதல், அது பொங்குதல், பொங்கி வழியும் திசை, நிறைவு செய்தல் எல்லாமே மங்கலக் குறியீடாகவே பார்க்கப்படும் மரபு இன்னும் தொடர்கிறது. பொங்கலோடு சிறு கிழங்கு, பனங்கிழங்கு என ஐந்து வகைக் கிழங்குகளும், பூசணி, மொச்சை, புடலை, சுரைக்காய், கத்தரிக்காய் என ஐந்துவகைக் காய்கறிகளும் படைக்கப்படும்.

பொங்கலுக்கு முன் பூளைப்பூ பிரண்டை, ஆவாரம் பூ எருக்கம் பூ கொண்டு காப்புக் கட்டும் வழக்கம் உள்ளது. பொங்கல் பண்டிகையில் பூளைப்பூ முதன்மையிடம் பெறுகிறது. நிகண்டு ‘பூளை வெற்றிப் பூவாகும் மே’ என்று குறிப்பிடுகிறது. ‘ஏரார் இரும்பூளை இடங்கொண்ட ஈரனே’ என்று ஞானசம்பந்தர் தேவாரத்தில் குறிப்பிடுகிறார்.

பொங்கல் விழா தமிழ் நிலத்தில் மரபு வழியாக உழவர்களின் அறுவடை விழாவாக, இயற்கை சக்திகள் தவிர பயிர், தாவரங்களில் குடியிருக்கும், ஆவிகள், சிறு தெய்வங்கள், குல தெய்வங்கள் போன்றவற்றிற்கு நன்றி கூறும் விழாவாக நிலை பெற்றிருக்கிறது. பொங்கல் தமிழ்நாட்டிலும், தமிழர்கள் வாழும் வெளிநாடுகளிலும் கொண்டாடப்படுகிறது.

ஆந்திராவில் மகர சங்கராந்தி என்றும் பஞ்சாப், ஹரியானாவில் லோஹ்ரி' என்ற பெயரில் கோதுமை அறுவடைத் திருவிழாவாகவும் அஸ்ஸாமில் ‘மாஹ் பிகு, புகுலி பிகு' என்ற பெயரில் நெல் அறுவடைத் திருவிழாவாகவும் கொண்டாடப்படுகிறது. உழவனே உலகிற்கு உயிர் கொடுப்பவனாக உலகே போற்றியது. 'மேழி பிடிக்கும் கைவேல் வேந்தர்க்கு நோக்குங்கை’ என்று பாடுகிறார் கம்பர். ‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்’ என்கிறார் வள்ளுவர். ‘வரப்புயர நீருயரும்’ என்கிறார் ஔவை. ‘உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்’ என்கிறார் மகாகவி.

**ஏறுதழுவுதல்**

ஏறு தழுவுதல் என்பது இடையர், யாதவர் என்ற தொன்மையான ஆயர்குடிகளின் மரபுவழி வீரவிளையாட்டாகும். 'ஏறு' என்பது காளை மாட்டைக் குறிக்கும். பண்டைக்கால ஐந்திணை நிலங்களுள் ஒன்றான முல்லை நிலத்து ஆயர் இன மக்களிடம் காளையை அடக்கும் வீரனை மணமகனாகத் தேர்வு செய்யும் முறை இருந்தது. பின்னர் திருமணம் ஆன ஆடவர்களும் வேறு சமூகத்தைச் சார்ந்தவர்களும் இந்த ஏறு தழுவுதலில் பங்கேற்றதினால் இம் மரபு காலப்போக்கில் பல்வேறு திணை மக்களின் வீர விளையாட்டாக மாற்றம் கண்டது.

**கலித்தொகையில் ஏறுதழுவுதல்**

சங்க இலக்கியமான கலித்தொகை 'கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும், புல்லாளே ஆய மகள்' என்கிறது. காளையை அடக்கத் துணிவு இல்லாதவனை ஒரு பெண் மறுபிறப்பிலும் அவனைத் தொடுவதற்குக்கூட விரும்ப மாட்டாள்.

'ஏறு தழுவுதல்' நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன் னரே, சிந்துவெளி நாகரிக காலத்திலேயே வழக்கில் இருந் துள்ளது. 1930இல் மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட சிந்துவெளி நாகரிகம் சார்ந்த முத்திரை ஒன்றில் காளையை அடக்கும் வீரனின் உருவம் பொறிக்கப் பட்டுள்ளது இதற்கான சான்றாகும்.

பழந்தமிழ் நூலான கலித்தொகையிலுள்ள முல்லைக் கலியில் இடம்பெற்றுள்ள பாடல்களில் ஏறுதழுவுதல் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. மலைபடுகடாம், பட்டினப்பாலை சிலப்பதிகாரம் ஆகிய இலக்கியங்களிலும் 'ஏறுதழுவுதல்' பற்றிய குறிப்புகள் உள்ளன.

கூரிய கொம்புகளுடனும், பருத்த திமில்களுடனும் கொல்லும் வலிமை கொண்ட காளையைத் தழுவிப் போரிட்டு அடக்குவதால் தெற்கு 'கொல்லேறு தழுவுதல் என்னும் பெயர் வந்துள்ளது. வீரத்தின் அடையாளமாகவும் வேட்டையிலும், போரிலும் விலங்குகளை அடக்கும் பயிற்சியாகவும் இது கருதப்பட்டது.

பண்டைக் காலத்தில் மண் தான் அசையா சொத்து மாடு அசையும் சொத்து எதிரியின் இடத்திற்குச் சென்று ஆநிரைகளை (மாட்டு மந்தையை) கவர்ந்து செல்வதும், அதனை மீட்கப் போரிடு வதும் வழக்கம். ஆறலைக் கள்வர்களும், அரண்மனை வீரர்களும், மறவர்களும் இக்கலையில் பயிற்சி பெற்றிருந்தனர் என்றாலும், முல்லை நிலத்தவரைத் தவிர வேறு எந்த நிலத்தவரிடமும் ஏறு தழுவுதல் நிகழ்ந்ததாகக் குறிப்புகள் காணப்படவில்லை.

'ஏறுதழுவுதல்' நடக்கும் இடத்திற்கு 'தொழூஉ' அதாவது 'தொழுவம்' என்று பெயர். முன்னதாகவே 'ஏறுதழுவுதல்' நடப் பதற்கான பறையறிவிப்பு செய்யப்படும். ஏறுதழுவப் போகும் ஏந்தல் (இளைஞர்) தன் சுற்றத்தாருக்குச் சொல்லி அனுப்புவான். 'ஏறுதழுவுதல்' நிகழ்ச்சிக்கு முதல்நாள் இரவு மகளிரும் மைந்தரும் சேர்ந்து 'குரவை'ஆடுவார்கள்.

காளைகளை அடக்க ஆயர்கள் பிடவம் பூ, செங்காந்தள் பூ காயாம் பூ முல்லை, குருந்து, வெட்சி, தளவம் முதலான மாலை களை சூடி அணிவகுத்து நிற்பர். இந்தக் காளையை அடக்குபவனுக்கு இவள் உரியவள்' என அறிவிக்கப்படும். ஆடவர்கள் துறை (இந்திரன்), ஆலம் (சிவன்), மராஅம் (முருகன்) ஆகியவற்றை வணங்கிய பின்னர்தான் தொழுவுக்கு ஏறுதழுவச் செல்லுதல் வழக்கம்.

கொம்பைப் பிடித்து அழுத்துதல், கழுத்தைப் பிடித்து தொங்கல், கழுத்தைத் திருகுதல், திமில் என்னும் கொட்டேறியைத் தழுவுதல், தோளில் ஏறல், நெருங்கிப் பிடித்தல் முதலானவையே காளையை அடக்கும் உத்திகள். 'காளையின் கொம்பைப் பிடித்தால் ஆண்மை, வாலைப் பிடித்தால் தாழ்மை' என்பது நெறியாக இருந்தது. காதல் என்பதே வீரத்தோடு தொடர்புடையதாக இருந்துள்ளது.

பண்டைய காலத்தில் ஆயர்களின் திருமணம் தொடர்பானதாக இருந்த 'ஏறு தழுவுதல் கால மாற்றத்தில் 'மஞ்சுவிரட்டு', 'சல்லிக் கட்டு' வீரவிளையாட்டாக மாற்றம் கொண்டது.

வட தமிழகத்தில் 'மஞ்சுவிரட்டு' என்ற பெயரில் 20 அடி நீளக் கயிற்றால் காளையைக் கட்டி இருபுறமும் காளையை இழுத்துப் பிடிக்க, ஒருசிலர் மட்டும் காளையின் முன்னே நின்று கொம்பில் கட்டப்பட்டுள்ள பரிசுப் பொருட்களை எடுக்க முயற்சிக்கின்றனர்.

'சல்லிக்கட்டு' என்பதிலுள்ள 'சல்லி' என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையத்தைக் குறிக்கும். இப்போதும்கூட புளியங்கம்பினால் வளையம் செய்து, காளையின் கழுத்தில் அணி யும் வழக்கம் உள்ளது. 'சல்லிக்காசு' அதாவது நாணயத்தினை மஞ்சள் துணியில் வைத்து மாட்டின் கொம்பில் கட்டிவிடும் வழக்கம் இருந்தது. மாட்டினை அணையும் வீரருக்கு அந்தப் பண முடிப்பு சொந்தமாகிவிடும்.

**தற்காலங்களில் 'சல்லிக்கட்டு'**

தற்காலங்களில் 'சல்லிக்கட்டு' தமிழ்நாட்டில் 'தை' மாதம் பொங்கல் விழாவின் ஒரு அங்கமாக மாதம் முழுவதும் ஒவ்வொரு பகுதிகளிலும் ஒவ்வொரு விதமாக நடைபெற்று வருகிறது. மதுரை மாவட்டத்திலுள்ள அலங்காநல்லூர், பாலமேடு, அவனியாபுரம், தேனி மாவட்டத்திலுள்ள சின்னமனூர், பாலார்பட்டி, புதுக்கோட்டை மாவட்டத்தில் நார்த்தாமலை, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஆதமங்கலம், சிவகங்கை மாவட்டத்தில் சிராவயல் ஆகிய பகுதிகளில் 'சல்லிக்கட்டு' நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் உலகப் புகழ்பெற்றது அலங்காநல்லூர் சல்லிக் கட்டு. வாடிவாசல் வழியாக வெளியேறும் காளைகளை அடக்கு பவர்களுக்கு 'தங்கநாணயம்', பாத்திரங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், வேட்டி துண்டுகள் போன்ற பரிசுப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

சல்லிக்கட்டுக்காகவே காளைகளைத் தனியாக வளர்த்து பயிற்சியளிக்கப்படுகிறது அக் காளைகள் வேறு எதற்கும் பயன் படுத்தப்படுவதில்லை. சல்லிக்கட்டு காளைகளை வளர்ப்பவர்கள் முழுக் கவனத்தோடு,அர்ப்பணிப்பு உணர்வோடு அக்காளைகளோடு ஒரு பிணைப்பினை ஏற்படுத்திக் கொள்கின்றனர். அதனோடு இணைந்ததாகவே தங்கள் வாழவை அமைத்துக்கொள்கின்றனர். ஊர்ப்புறங்களில் கோவிலுக்கு நேர்ந்து விடும் கோவில் காளைகளே சல்லிக்கட்டுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

இதேபோன்று ஸ்பெயின், போர்ச்சுக்கல், மெக்சிகோ போன்ற நாடுகளில் நடைபெறும் 'காளைச் சண்டை' பொழுதுபோக்கு விளையாட்டாக இருப்பினும் அது சல்லிக்கட்டு விளையாட்டிலிருந்து வேறுபட்டதாகும்.

ஏறுதழுவுதல் சல்லிக்கட்டு என்பது ஒரு மரபு சார்ந்த விளையாட்டாகவும், பண்பாட்டின் அடையாளமாகவும், தைப் பொங்கல் விழாக்களின் ஒரு அங்கமாகவும் போற்றப்பட்டு வந்த நிலையில் சல்லிக்கட்டு போட்டிகளில் விலங்குகள் துன்புறுத்தப் படுவதாக விலங்குகள் நல அமைப்புகள் குறிப்பாக புளகிராஸ் மற்றும் பீட்டா' போன்ற அமைப்புகள் சல்லிக்கட்டுக்கு எதிராக நீதி மன்றத்தில் தடை கோரின. இதன் காரணமாக 2007இல் இருந்தே ஒவ்வொரு ஆண்டும் சல்லிக்கட்டு ஆதரவாளர்களும் எதிர்ப்பாளர்களும் நீதிமன்றத்தினை நாடும் சூழல் ஏற்பட்டுள்ளது.

விலங்குகளைக் காப்பது என்பதனை எதிர்ப்பாளர்கள் முன் வைத்தாலும் அதற்கு பின்னால் மிகப் பெரிய பன்னாட்டு அரசியல் இருப்பதாகவும் கருதப்படுகிறது. மாட்டிறைச்சி சந்தைக்கு எதிராக சல்லிக்கட்டு உள்ளது என்றும், நாட்டு மாடுகளுக்கு வெளிநாடுகளில் நல்ல சந்தை மதிப்பு இருக்கிறது, சல்லிக்கட்டுக்கு தடை வந்தால் அதன் விளைவாக நாட்டு மாடுகள் சந்தைக்கு வரும் சூழ்நிலை உருவாக்கப்படும். என்றும் கருதப்படுகிறது.

உலக உணவு, விவசாய அமைப்பும், பொருளாதார கூட்ட மைப்பும் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையின்படி 2016இல் இந்தியா 150 மில்லியன் டன் மாட்டு இறைச்சியை ஏற்றுமதி செய்துள்ளது. 2020க்குள் இது 193 மில்லியன் டன் ஆக உயரும் என்றும் கூறியுள்ளது. என்றாலும் எந்தவிதமான மாட்டு இறைச்சி என்று கூறவில்லை எருமை இறைச்சி அதிக அளவில் ஏற்றுமதியில் இடம்பெற்றுள்ளது. 2016-2017இல் 3.76 மில்லியன் மதிப்பிலான எருமை இறைச்சியை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது. உலகில் அதிக அளவு மாட்டு இறைச்சி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் பிரேசில் முதல் இடத்திலும், ஆஸ்திரேலியா இரண்டாவது இடத்திலும், இந்தியா மூன்றாவது இடத்திலும் உள்ளன.

'சல்லிக்கட்டு' என்பது ஒரு இனக் குழுவின் தனித்த அடையாளம் மரபுவழிப் பண்பாடு. சல்லிக்கட்டு சார்ந்த பழக்க வழக்கங்கள், சடங்குகள், அது தொடர்பான வழக்குகள், உரையாடல்கள், உறவாடல்கள் பண்பாட்டின் வளமையாகக் கருதப்படுகிறது.

மனிதப் பண்பாட்டில் பிற உயிரினங்களின் தாக்கம் இருப் பதைத் தவிர்க்க இயலாது. அந்த வகையில் உயிரினப் பன்மயம்' என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையிலேயே ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சல்லிக்கட்டினை ஆதரிக்கின்றது.

**முடிவுரை**

பொங்கல், ஏறுதழுவுதல், பாவை நோம்பு போன்ற தமிழர் மரபு வழியான திருவிழாக்கள் குறித்து தொன்மையானத் தமிழ் இலக்கியங்கள் வழி ஆராயப்பட்டு பல தகவல்கள் கண்டறிந்து கூறப்பட்டுள்ளது. தொன்மையான இவ்விழாக்களுக்கானக் காரண, காரியங்கள் ஆராய்ந்து கூறப்படுகிறது.

**பார்வை நூல்கள்**


1. அறிப்படாத தமிழகம், தொ. பரமசிவன், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில் (2014).
2. தமிழர் உறவு முறைகளும் சமயமும் வழிபாடும், தொ. பரமசிவன்.
3. சங்ககால விளையாட்டுகள், ம.திருமலை.
4. தமிழர் வரலாறு பகுதி 1,2 ஞா.தேவநேயப்பாவாணர் தமிழ்மண் மதிப்பகம்,சென்னை.
5. தமிழகச் சமுதாய பண்பாட்டுக் கலைவரலாறு, கு.சேதுராமன், நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை.
6. சங்க இலக்கியம்,(கலித்தொகை, பரிபாடல், நற்றினை, அகநானூறு, குறுந்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
7. தமிழ் இலக்கியத் தடங்கள் ம. செ. இரபிசிங் அன்னம் - அகரம், தஞ்சாவூர்(2008)
8. தமிழர் இயங்கியல்,க. நெடுஞ்செழியன், தமிழர் இயங்கியல், சென்னை-70
9. உலகத் தமிழ்ச் செம்மொழி ஆய்வரங்கச் சிறப்புமலர், கோவை (2010)


**References:**


1. Unknown Tamil Nadu, Th. Paramasivan, Kalachuvadu Publications, Nagercoil (2014).
2. Tamil Kinship Systems, Religion and Worship, Th. Paramasivan.
3. Sangam Era Games, M. Thirumalai.
4. Tamil History Part 1,2 Gna.Deivaneyapavanar Tamilmann Pathippagam,Chennai.
5. History of Tamil Society, Culture and Art, Ku.Sethuraman, New Century Book House, Chennai.
6. Sangam Literature (Kalittokai, Paripaadal, Natrinai, Akananuru, Kurunthokai, Paripaadal,Pathirrupathu), New Century Book House, Chennai.
7. Routes of Tamil Literature, M. Se. Rabisingh, Annam - Agaram, Thanjavur (2008).
8. Tamil Dynamics,Ka. Nedunchezhiyan, Tamil Dynamics, Chennai-70.
9. Special Publication of the World Classical Tamil Conference, Coimbatore (2010).


**Copyright (c) Author**

**This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.**